## 7th Tamil Unit 5 Questions - New Book

1) "இன்பத் தமிழ்க் கல்வி யாவரும் கற்றவர்
என்றுரைக்கும் நிலை எய்தி விட்டால்" என்ற பாடலைப் பாடியவர் யார்?

A) பாரதியார்

**B) பாரதிதாசன்**

C) சுரதா

D) நாராயணக்கவி

**விளக்கம்: "இன்பத்தமிழ்க் கல்வி" என்னும் தலைப்பின் கீழ் பாரதிதாசன் எழுதிய பாடல் வரிகளே இவையாகும்.**

2) பொருத்துக.

அ. எத்தனிக்கும் – 1. சமம்

ஆ. வெற்பு – 2. வயல்

இ. கழனி – 3. மலை

ஈ. நிகர் – 4. முயலும்

**A) 4, 3, 2, 1**

B) 3, 4, 2, 1

C) 4, 2, 3, 1

D) 4, 3, 1, 2

**விளக்கம்: எத்தனிக்கும் – முயலும்**

**வெற்பு – மலை**

**கழனி – வயல்**

**நிகர் – சமம்**

3) பொருத்துக

அ. பரிதி – 1. மழைமேகம்

ஆ. அன்னதோர் – 2. உறங்கியிருந்தார்

இ. கார்முகில் – 3. அப்படி ஒரு

ஈ. துயின்றிருந்தார் – 4. கதிரவன்

**A) 4, 3, 1, 2**

B) 4, 3, 2, 1

C) 4, 2, 3, 1

D) 4, 1, 3, 2

**விளக்கம்: பரிதி – கதிரவன்**

**அன்னதோர் – அப்படியொரு**

**கார்முகில் – மழைமேகம்**

**துயின்றிருந்தார் – உறங்கியிருந்தார்**

4) "இன்பத்தமிழ்க் கல்வி" என்னும் பாடலில் பாரதிதாசனின் எண்ணங்களில் பொருந்தாததைத் தேர்க

A) என்னைக் கவிதையாக எழுதுக என்றது வானம்

B) எங்களைக் கவி ஓவியமாகத் தீட்டுக என்றது நீரோடை

C) அன்பினைக் கவிதையாக எழுதுக என்றனர் ஆடும் மயில் போன்ற பெண்கள்

**D) "மலை போன்ற எங்களது தோள்களின் அழகினை எழுதுங்கள்" என்றனர் வில் ஏந்திய வீரர்கள் விளக்கம்: மலை போன்ற எங்களது தோள்களின் அழகினை எழுதுங்கள் என்றனர் வேல் ஏந்திய வீரர்கள்.**

5) பிசிராந்தையார் என்பது எவ்வகை நாடகம்?

A) இசை நூல்

B) ஓவிய நூல்

**C) நாடக நூல்**

D) உரைநடை நூல்

**விளக்கம்: பிசிராந்தையார் என்பது நாடகநூல். இதன் ஆசிரியர் பாரதிதாசன்**

6) பாரதிதாசனின் எந்த நூல் சாகித்ய அகாடமி விருது பெற்றது?

A) குடும்ப விளக்கு

B) பாண்டியன் பரிசு

C) கண்ணகி புரட்சிக் காப்பியம்

**D) பிசிராந்தையார்**

**விளக்கம்: பாரதிதாசனின் பிசிராந்தையார் என்ற நூலுக்கு சாகித்த அகாடமி விருது அளிக்கப்பட்டது. இவர் கவிஞர், இதழாளர், தமிழாசிரியர் எனப் பன்முக ஆற்றல் கொண்டவர்.**

7) பொருந்தாததைத் தேர்க.

A) அழகின் சிரிப்பு

B) இசையமுது

C) இருண்டவீடு

**D) மலைக்கள்ளன்**

**விளக்கம்: மலைக்கள்ளன் என்பது நாமக்கல் கவிஞர் இயற்றிய நூலாகும். பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, இசையமுது, இருண்ட வீடு, குடும்ப விளக்கு, கண்ணகி புரட்சிக் காப்பியம், பிசிராந்தையார் ஆகியவை பாரதிதாசனின் படைப்புகள் ஆகும்.**

8) "இன்பத்தமிழ் கல்வி" என்னும் பாடல் எந்த நூலிலிருந்து எடுக்கப்பட்டது?

A) பிசிராந்தையார்

**B) பாரதிதாசன் கவிதைகள்**

C) அழகின் சிரிப்பு

D) இருண்ட வீடு

**விளக்கம்: பாரதிதாசன் கவிதைகள் என்னும் நூல் தொகுப்பிலிருந்து "தமிழ்ப்பேறு" என்னும் தலைப்பின் கீழ் "இன்பத்தமிழ்க் கல்வி" என்னும் பாடல் அமைந்துள்ளது.**

9) பெண்களுக்கு நிகராகப் பாரதிதாசன் கூறுவது?

**A) மயில்**

B) குயில்

C) கிளி

D) அன்னம்

**விளக்கம்: "ஆடும் மயில் நிகர் பெண்களெல்லாம்" என்னும் வரிகளில் பெண்கள் மயில்களுக்கு நிகர் எனக் குறிப்பிட்டுள்ளார்.**

10) ஏடெடுத்தேன்–பிரித்தெழுதுக

A) ஏடெடு + தேன்

B) ஏ + டெடுத்தேன்

**C) ஏடு + எடுத்தேன்**

D) ஏ + டெடுத்தேன்

**விளக்கம்: ஏடெடுத்தேன் – ஏடு + எடுத்தேன் என்று பிரியும்**

11) துயின்றிருந்தார் பிரித்தெழுதுக.

**A) துயின்று + இருந்தார்**

B) துயில் + இருந்தார்

C) துயின்றி + இருந்தார்

D) துயின் + இருந்தார்

**விளக்கம்: துயின்றிருந்தார் – துயின்று + இருந்தார் எனப் பிரியும்**

12) என்று + உரைக்கும் சேர்த்தெழுதுக.

A) என்றுஉரைக்கும்

B) என்றிரைக்கும்

C) என்றரைக்கும்

**D) என்றுரைக்கும்**

**விளக்கம்: என்று + உரைக்கும் என்பது என்றுரைக்கும் எனப் புணரும்**

13) சமண முனிவர்கள் பலரால் எழுதப்பட்ட நூல் எது?

A) நற்றிணை

B) குறுந்தொகை

**C) நாலடியார்**

D) திரிகடுகம்

**விளக்கம்: சமண முனிவர்கள் பலரால் எழுதப்பட்ட நூல் நாலடியார். இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகும்.**

14) "வேளாண்மை வேதம்" என்று அழைக்கப்படும் நூல் எது?

A) திருக்குறள்

B) ஏலாதி

C) திரிகடுகம்

**D) நாலடியார்**

**விளக்கம்: நாலடியார் நூலானது வேளாண்வேதம், குட்டித்திருக்குறள் எனவும் அழைக்கப்படும்**

15) நாலடியார் எத்தனை வெண்பாக்களால் ஆனது?

A) 300

**B) 400**

C) 180

D) 120

**விளக்கம்: நாலடியார் நானூறு வெண்பாக்களால் ஆனது. இதனை நாலடி நானூறு என்றும் அழைப்பர்.**

16) நாலடியார் எத்தனை பகுப்புகளைக் கொண்டது?

A) 2

**B) 3**

C) 4

D) 5

**விளக்கம்: நாலடியார் நூலானது அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால் பகுப்புக் கொண்டது.**

17) நாலடியார் எந்த நூலுக்கு இணையாக வைத்துப் போற்றப்படுகிறது?

**A) திருக்குறள்**

B) ஏலாதி

C) திரிகடுகம்

D) நாண்மணிக்கடிகை

**விளக்கம்: நாலடியார், திருக்குறளுக்கு இணையாக வைத்துப் போற்றப்படுவதை "நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்னும் தொடர் மூலம் அறியலாம்.**

18) பொருத்துக

| | | |
|---|---|---|
| அ. வைப்புழி | – | 1. வாய்க்கும்படி கொடுத்தாலும் |
| ஆ. கோட்படா | – | 2. கல்வி |
| இ. வாய்த்து ஈயில் | – | 3. பொருள் சேமித்து வைக்குமிடம் |
| ஈ. விச்சை | – | 4. ஒருவரால் கொள்ளப்படாது |

A) 4, 3, 2, 1

B) 4, 2, 3, 1

**C) 3, 4, 1, 2**

D) 3, 2, 1, 4

| | |
|---|---|
| **விளக்கம்: வைப்புழி** | **– பொருள் சேமித்து வைக்குமிடம்** |
| **கோட்படா** | **– ஒருவரால் கொள்ளப்படாது** |
| **வாய்த்து ஈயில்** | **– வாய்க்கும்படி கொடுத்தாலும்** |
| **விச்சை** | **– கல்வி** |

19) ஒருவர் தம் குழந்தைகளுக்குச் சேர்த்து வைக்க வேண்டிய செல்வம் எது?

A) அன்பு

B) பொருள்

C) புண்ணியம்

**D) கல்வி**

**விளக்கம்: ஒருவர் தம் குழந்தைகளுக்குச் சேர்த்து வைக்க வேண்டிய செல்வம் கல்வியே ஆகும். மற்றவை செல்வம் ஆகா.**

20) "வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை" என்ற பாடல் வரிகள் இடம் பெற்ற நூல் எது?

A) திருக்குறள்

**B) வேளாண்வேதம்**

C) ஏலாதி

D) திரிகடுகம்

**விளக்கம்: "வைப்பழி கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை**

**மிகச் சிறப்பின் அரசர் செறின் வல்வார்**

**எச்சம் எனவொருவன் மக்கட்குச் செய்வன**

**விச்சைமற்று அல்ல பிற" – நாலடியார்**

21) கல்வியைப் போல் _________ செல்வம் வேறில்லை

A) விலையில்லாத

**B) கேடில்லாத**

C) உயர்வில்லாத

D) தவறில்லாத

**விளக்கம்: கல்வியைப் போல் கேடில்லாத செல்வம் வேறில்லை என்பதை "வைப்புழி கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை" என்ற வரிகள் மூலம் அறியலாம்.**

22) "வாய்த்தீயின்" பிரித்தெழுதுக

**A) வாய்த்து + ஈயின்**

B) வாய் + தீயின்

C) வாய்த்து + தீயின்

D) வாய் + ஈயின்

**விளக்கம்: வாய்த்தீயின் – வாய்த்து + ஈயின் எனப் பிரியும்**

23) கேடில்லை–பிரித்தெழுதுக

A) கேடி + இல்லை

B) கே + இல்லை

C) கேள்வி + இல்லை

**D) கேடு + இல்லை**

**விளக்கம்: கேடில்லை – கேடு + இல்லை எனப் பிரியும் .**

24) எவன் + ஒருவன்–சேர்த்தெழுதுக.

A) எவன்ஒருவன்

B) எவனொருவன்

**C) எவ்னொருவன்**

D) ஏன்னொருவன்

**விளக்கம்: எவன் + ஒருவன் – எவனொருவன் எனப் புணரும்**

25) "வெள்ளத்தால் அழியாது வெந்தணலால்

வேகாது வேந்த ராலும்_______" என்ற பாடல் வரிகள் இடம்பெற்ற நூல் எது?

A) ஏலாதி

B) நாலடியார்

**C) தனிப்பாடல் திரட்டு**

D) திரிகடுகம்

**விளக்கம்: "வெள்ளத்தால் அழியாது வெந்தணலால்**

**வேகாது வேந்த ராலும்**

**கொள்ளத்தான் முடியது கொடுத்தாலும்**

**நிறைவன்றிக் குறைவு றாது**

**கள்ளர்க்கோ பயமில்லை காவலுக்கு**

**மிகஎளிது கல்வி என்னும்**

**உள்ளப்பொருள் உள்ளிருக்கப் புறத்தேயோர்**

**பொருள்தேடி உலகின் நீரே" – தனிப்பாடல் திரட்டு**

26) அழியாத செல்வம் எது?

A) பணம்

B) பொருள்

**C) கல்வி**

D) நகை

**விளக்கம்: உலகில் பலவகையான செல்வங்கள் உள்ள. அவற்றுள் அழியாத செல்வம் கல்விச் செல்வம் ஆகும். பிற செல்வங்கள் அனைத்தும் அழியும் தன்மை உடையது.**

27) உலகிலுள்ள உயிரினங்களுள் தனித்தன்மை உடையது எது?

A) தாவரம்

B) விலங்கு

C) பூஞ்சை

**D) மனிதன்**

**விளக்கம்: உலகிலுள்ள உயிரினங்களுள் தனித்தன்மை உடையது மனிதன் ஆகும். ஏனெனில் மனிதனுக்கு தான் எதிர்காலம் சொல்ல முடியது.**

28) "கேடில் விழுச்செல்வம் ________ ஒருவற்கு"

மாடல்ல மற்ற யவை" – குறளை நிறைவு செய்க.

**A) கல்வி**

B) அன்பு

C) அறம்

D) ஒழுக்கம்

**விளக்கம்: "கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு மாடல்ல மற்ற யவை" என்பது வள்ளுவர் வாக்கு. அதாவது கல்வி, மட்டுமே அழியாச் செல்வம் மற்ற அனைத்து செல்வங்களும் அழிந்துவிடும் என்பது இதன் பொருள்.**

29) எது ஓர் ஒளிவிளக்கு போன்றது?

A) அன்பு

B) அறம்

C) ஒழுக்கம்

**D) கல்வி**

**விளக்கம்: கல்வி ஓர் ஒளிவிளக்கு. ஏனெனில், கல்வி, இருக்கும் இடத்தை ஒளிமயமாக ஆக்குவது ஆகும். கல்வி கற்ற ஒருவர். அதை பலருக்கும் கற்றுக் கொடுக்கும் போது கல்வி பலருக்கு ஒளி தருவதாக அமைகிறது.**

30) விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்

கற்றாரோடு ஏனை யவர் – இப்பாடல் வரிகள் எந்நூலில் இடம்பெற்றுள்ளன?

A) நாலடியார்

B) நான்மணிக்கடிகை

C) ஏலாதி

**D) திருக்குறள்**

**விளக்கம்: இது திருக்குறள் ஆகும். இதன் பொருள், கல்வி அறிவு பெறாதவர் விலங்கிற்கு ஒப்பானவர் என்று வள்ளுவர் உரைக்கின்றார்.**

31) "நன்றின்பால் உய்ப்பது அறிவு" என்ற கூறியவர் யார்?

A) சமண முனிவர்

B) நக்கீரர்

C) கபிலர்

**D) திருவள்ளுவர்**

**விளக்கம்: நல்ல செயலை செய்ய, இன்னொருவர் வந்து சொல்ல வேண்டும் என்று காத்திருக்கக் கூடாது என்பதே இதன் பொருளாகும்.**

32) இளம்பிள்ளைகளை நல்ல குடிமக்களாக உருவாக்கும் திறன் பெற்றவர்கள் யார்?

A) பெற்றோர்

**B) ஆசிரியர்**

C) சான்றோர்

D) அரசு

**விளக்கம்: இளம்பிள்ளைகளை நல்ல குடிமக்களாக உருவாக்கும் திறன் பெற்றவர்கள் ஆசிரியர்களே.**

33) "பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்
எங்கள் பாரத தேசமென்று தோள்கொட்டுவோம்" இப்பாடல் யாருடையது?

A) நாமக்கல் கவிஞர்

B) பாரதிதாசன்

C) சுரதா

**D) பாரதி**

**விளக்கம்: நமது எதிர்காலத்தை உருவாக்கும் பள்ளிக்குக் கோயில் என்று பெயர் வைத்தவர் பாரதியார்.**

34) உலகப்பொதுமறை திருக்குறள் உரை விளக்கம் என்னும் நூலின் ஆசிரியர் யார்?

A) பாரதி

B) பாரதிதாசன்

**C) வீ.முனுசாமி**

D) வள்ளுவர்

**விளக்கம்: திருக்குறள் வகுப்புகள் நடத்தியும், தொடர் சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் திருக்குறளைப் பரப்பும் பணி செய்தவர் திருக்குறளார் வீ. முனிசாமி. இவை நகைச்சுவை ததும்பும் தமது பேச்சால் மக்களைக் கவர்ந்தவர்.**

35) வீ. முனுசாமி–ன் புகழ் பெற்ற நூல் எது?

A) வள்ளுவர் உள்ளம்

B) வள்ளுவர் காட்டிய வழி

C) திருக்குறளில் நகைச்சுவை

**D) உலகப்பொதுமறை திருக்குறள் உரை விளக்கம்**

**விளக்கம்: மேற்கண்ட அனைத்து நூல்களும் வீ. முனுசாமி–ன் நூல்களே. அவற்றுள் பெரும் புகழ் பெற்ற நூல் "உலகப்பொதுமறை திருக்குறள் உரை விளக்கம்" என்பதாகும்.**

36) திருக்குறளார் வீ.முனுசாமி–ன் எந்த நூலிலிருந்து "வாழ்விக்கும் கல்வி" என்ற பாடல் தொகுக்கப்பட்டது?

A) வள்ளுவர் உள்ளம்

B) வள்ளுவர் காட்டிய வழி

C) திருக்குறளில் நகைச்சுவை

**D) சிந்தனைக் களஞ்சியம்**

**விளக்கம்: வள்ளுவர் உள்ளம், வள்ளுவர் காட்டிய வழி, திருக்குறளில் நகைச்சுவை, உலகப்பொதுமறை திருக்குறள் உரை விளக்கம், சிந்தனைக் களஞ்சியம் ஆகியவை வீ. முனுசாமியின் நூல்கள் ஆகும்.**

37) கல்வியல்லாத நாடு________வீடு போன்றது.

**A) விளக்கில்லாத**

B) பொருளில்லாத

C) கதவில்லாத

D) வாசலில்லாத

**விளக்கம்: கல்வியில்லாத நாடு விளக்கில்லாத வீடு போன்றது. விளக்கில்லாத வீட்டில் யாரும் குடியிருக்க மாட்டார்கள். அதேபோல், கல்வியில்லாத குடும்பத்தை யாரும் மதிக்க மாட்டார்கள்.**

38) "உயர்வடைவோம்" பிரித்தெழுதுக.

A) உயர் + வடைவோம்

B) உயர் + அடைவோம்

C) உயர் + வடைவோம்

**D) உயர் + அடைவோம்**

**விளக்கம்: உயர்வடைவோம் – உயர் + அடைவோம் என்றுப் பிரியும்.**

39) இவை + எல்லாம் – சேர்த்தெழுதுக

A) இவையெல்லாம்

**B) இவையெல்லாம்**

C) இதுயெல்லாம்

D) இவயெல்லாம்

**விளக்கம்: இவை + எல்லாம் – என்பது இவையெல்லாமம் என்றுப் புணரும்**

40) "இளமையில் கல்" என்று கூறியவர் யார்?

**A) ஔவையார்**

B) பாரதியார்

C) பாரதிதாசன்

D) திருவள்ளுவர்

**விளக்கம்: "இளமையில் கல்" என்று கூறியவர் ஔவையார். இளமைப்பருவம் கல்விக்கே உரியதாகும். இளமையில் கற்கும் கல்வி, ஒருவனை சான்றோனாக்கும்.**

41) குழந்தை தொழிலாளர் முறை ஒழிப்பு, இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் போன்ற கருத்துக்களை வலியுறுத்திச் சிறுகதை, புதினம், கட்டுரை முதலியவற்றை எழுதியர் யார்?

A) சுப்பிரமணியம்

B) உ.வே.சா

C) பாரதி

**D) சுப்ரபாரதிமணியன்**

**விளக்கம்: குழந்தை தொழிலாளர் முறை ஒழிப்பு, இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் போன்ற கருத்துக்களை வலியுறுத்திச் சிறுகதை, புதினம், கட்டுரை முதலியவற்றை எழுதியவர் சுப்ரபாரதிமணியன் ஆவார்.**

42) சுப்ரபாரதிமணியன் நடத்தி வருகிற இதழ் எது?

A) பின்னல

B) வேட்டை

C) புத்துமண்

**D) கனவு**

**விளக்கம்: சுப்ரபாரதிமணியன் நடத்தி வரும் இதழ் "கனவு". மற்றவை அவரது நூல்கள் (பின்னல், வேட்டை, புத்துமண், தண்ணீர் யுத்தம், இதை சொல்லும் கலை).**

43) தமிழில் மொத்தம் எத்தனை ஓரெழுத்து ஒருமொழி உள்ளது?

A) 40

**B) 42**

C) 44

D) 46

**விளக்கம்: தமிழில் மொத்தம் 42 ஓரெழுத்து ஒருமொழி உள்ளது. ஓர் எழுத்தே பொருள் தரும் சொல்லாக அமைவதை ஓரெழுத்து ஒரு மொழி என்பர்.**

44) தமிழில் 42 ஓரெழுத்து ஒருமொழி உள்ளது எனக் கூறியவர் யார்?

**A) சமணமுனிவர்**

B) பவணந்தி முனிவர்

C) தொல்காப்பியர்

D) அகத்தியர்

**விளக்கம்: "நன்னூல்" என்னும் இலக்கண நூலை எழுதிய பவணந்தி முனிவர், தமிழில் 42 ஓரெழுத்து ஒரு மொழி உள்ளன எனக் கூறுகிறார்.**

45) தமிழில் எத்தனை ஓரெழுத்து ஒருமொழி சொற்கள் நெடில் எழுத்தாக அமைந்துள்ளது?

**A) 40**

B) 42

C) 38

D) 36

**விளக்கம்: நொ, ஆகிய இரண்டு சொற்களைத் தவிர ஏனைய 40 சொற்களும் நெடில் எழுத்தாகவே அமைந்துள்ளது.**

46) அம்பு" என்று பொருள் தரும் ஓரெழுத்து ஒருமொழி எது?

A) ஆ

B) ஏ

C) ஊ

**D) ஏ**

**விளக்கம்: ஆ– பசு**

**ஈ – கொடு**

**ஊ – இறைச்சி**

**ஏ– அம்பு**

47) "பூமி"–யைக் குறிக்கும் ஓரெழுத்து ஒருமொழி எது?

A) ஐ

B) ஓ

**C) கூ**

D) கா

**விளக்கம்: ஐ – தலைவன்**

**ஓ – மதகுநீர் தாங்கும் பலகை**

**கா – சோலை**

**கூ – பூமி**

48) "அரசன்" என்பதை குறிக்கும் ஓரெழுத்து ஒருமொழி எது?

A) கை

**B) கோ**

C) சா

D) சீ

**விளக்கம்: கை – ஒழுக்கம்**

**கோ – அரசன்**

**சா – இறந்துபோ**

**சீ – இகழ்ச்சி**

49) "உயர்வு" என்பதைக் குறிக்கும் ஓரெழுத்து ஒருமொழி எது?

**A) சே**

B) சோ

C) தா

D) தீ

**விளக்கம்: சே – உயர்வு**

**சோ – மதில்**

**தா – கொடு**

**தீ – நெருப்பு**

50) "கடவுள்–யைக் குறிக்கும் ஒரெழுத்து ஒருமொழி எது?

A) தூ

**B) தே**

C) தை

D) நா

**விளக்கம்: தூ – தூய்மை**

**தே – தெய்வம்**

**தை – தைத்தல்**

**நா – நாவு**

51) "வறுமை"–யைக் குறிக்கும் ஒரெழுத்து ஒருமொழி எது?

A) நீ

B) நே

C) நை

**D) நோ**

**விளக்கம்: நீ – முன்னிலை ஒருமை**

**நே – அன்பு**

**நை – இழிவு**

**நோ – வறுமை**

52) "மேகம்" என்பதைக் குறிக்கும் ஓரெழுத்து ஒருமொழி எது?

A) பா

B) பூ

**C) பே**

D) பை

**விளக்கம்: பா– பாடல்**

**பூ – மலர்**

**பே – மேகம்**

**பை – இளமை**

53) "வான்" என்பதைக் குறிக்கும் ஓரெழுத்து ஒருமொழி எது?

A) போ

B) மா

**C) மீ**

D) மூ

**விளக்கம்: போ – செல்**

**மா – மாமரம்**

**மீ – வான்**

**மூ – மூப்பு**

54) "அன்பு" என்பதைக் குறிக்கும் ஓரெழுத்து ஒருமொழி எது?

**A) மே**

B) மை

C) மோ

D) யா

**விளக்கம்: மே – அன்பு**

**மை – அஞ்சனம்**

**மோ – மோத்தல்**

**யா – அகலம்**

55) "மலர்" என்பதைக் குறிக்கும் ஓரெழுத்து ஒருமொழி எது?

A) வா

**B) வீ**

C) வை

D) வெள

**விளக்கம்: வா – அழைத்தல்**

**வீ – மலர்**

**வை – புல்**

**வெள – கவர்**

56) 'து' என்னும் ஓரெழுத்து ஒருமொழி உணர்த்தும் பொருள் என்ன?

**A) உண்**

B) நோய்

C) அம்பு

D) பசு

**விளக்கம்: து – உண்**

**நொ – நோய்**

**ஏ – அம்பு**

**ஆ – பசு**

57) பகுபதம் எத்தனை வகைப்படும்?

**A) 2**

B) 3

C) 4

D) 6

**விளக்கம்: சிறுசிறு உறுப்புகளாகப் பிரிக்கும் வகையில் அமையும் சொற்கள் பகுபதங்கள் ஆகும். இது பெயர் பகுபதம், வினைப்பகுபதம் என 2 வகைப்படும்.**

**(எ.கா) வேலன் – இதை வேல் + அன் எனப் பிரிக்க இயலும்.**

58) பெயர்பகுபதத்தை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்?

A) 2

B) 3

C) 4

**D) 6**

**விளக்கம்: பகுபதமாக அமையும் பெயர்ச்சொல் பெயர்ப்பகுபதம் ஆகும். இதனை பொருள், இடம், காலம், சினை, குணம்(அல்லது) பண்பு, தொழில் என 6 வகையாகப் பிரிக்கலாம்.**

59) பொருத்துக.

| | |
|---|---|
| அ. பொன்னன் | – 1. இடம் |
| ஆ. நாடன் | – 2. பொருள் |
| இ. கண்ணன் | – 3. காலம் |
| ஈ. சித்திரையான் | – 4. சினை |

**A) 2, 1, 4, 3**

B) 2, 1, 3, 4

C) 1, 2, 3, 4

D) 1, 2, 4, 3

**விளக்கம்: (பொன் + அன்) பொன்னன் – பொருள்**

**(நாடு + அன்) நாடன் – இடம்**

**(கண் + அன்) கண்ணன் – சினை**

**(சித்திரை + அன்) சித்திரையான் – காலம்**

60) "இனியன்" என்பது என்ன வகை பெயர்பகுபதம்?

A) சினை

B) பொருள்

**C) பண்பு**

D) இடம்

**விளக்கம்: இனியன் என்பதை இனிமை + அன் எனப் பிரிக்கலாம். இனிமை என்பது பண்பைக் குறிக்கும்.**

61) "உழவன்" என்பது என்ன வகை பெயர்பகுபதம்?

A) பண்பு

B) இடம்

C) காலம்

**D) தொழில்**

**விளக்கம்: உழவன் என்பதை உழவு + அன் எனப் பிரிக்கலாம். இது 'உழவு' என்னும் தொழிலை அடிப்படையாகக் கொண்டது.**

62) "உண்கின்றான்" என்பது எவ்வகை சொல்?

A) பகுபதம்

B) பெயர்ப்பகுபதம்

**C) வினைப்பகுபதம்**

D) பகாப்பதம்

**விளக்கம்: உண்கின்றான் என்பதை உண் + கின்று + ஆன் எனப் பிரிக்கலாம். மேலும் இது உணவு உண்பதைப் பற்றிய வினையைப் பேசுவதால் இது வினைப்பகுபதம் ஆகும்.**

63) பகுபத உறுப்புகள் எத்தனை வகைப்படும்?

A) 4

B) 5

**C) 6**

D) 7

**விளக்கம்: பகுபத உறுப்புகள் 6 வகைப்படும். அவை பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம்.**

64) எப்போதும் கட்டளையாகவே அமையும் பகுபத உறுப்பு எது?

A) பகுதி

B) விகுதி

C) சந்தி

D) சாரியை

**விளக்கம்: பகுபதத்தின் முதலில் அமைந்து முதன்மையான பொருளைத் தருவது பகுதி ஆகும். இது கட்டளையாகவே அமையும்.**

65) பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் அமைந்து காலம் அல்லது எதிர்மறையைக் காட்டுவது எது?

A) சந்தி

**B) இடைநிலை**

C) சாரியை

D) விகாரம்

**விளக்கம்: பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் வந்து காலம் அல்லது எதிர்மறையைக் காட்டுவது இடைநிலை ஆகும்.**

66) பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் அமையும் மெய்யெழுத்து எவ்வாறு அழைக்கப்படும்?

**A) சந்தி**

B) இடைநிலை

C) சாரியை

D) விகாரம்

**விளக்கம்: பெரும்பாலும் பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையே இடம்பெறும் மெய்யெழுத்து சந்தி எனப்படும்.**

67) பெரும்பாலும் இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையே இடம்பெறும் அசைச்சொல் எவ்வாறு அழைக்கப்படும்?

A) சந்தி

B) விகாரம்

**C) சாரியை**

D) பகுதி

**விளக்கம்: பெரும்பாலும் இடைநிலைக்கும், விகுதிக்கும் இடையே இடம்பெறும் அசைச்சொல் சாரியை எனப்படும்.**

68) பகுதி, சந்தி, இடைநிலை முதலியவற்றில் ஏற்படும் மாற்றம் எவ்வாறு அழைக்கப்படும்

A) சந்தி

**B) விகாரம்**

C) சாரியை

D) பகுதி

**விளக்கம்: பகுதி, சந்தி, இடைநிலை முதலியவற்றில் ஏற்படும் மாற்றம் விகாரம் எனப்படும்**

69) பகுபதத்தின் இறுதியில் அமைந்து திணை, பால், எண், இடம் அல்லது முற்று, எச்சம் ஆகியவற்றை காட்டுவது எது?

A) பகுதி

B) சந்தி

**C) விகுதி**

D) சாரியை

**விளக்கம்: பகுபதத்தின் இறுதியில் அமைந்து திணை, பால், எண், இடம் ஆகியவற்றையோ, முற்று, எச்சம் ஆகியவற்றையோ காட்டுவது விகுதி ஆகும்.**

70) வந்தான்–இச்சொல்லில் பகுபதத்தின் சாரியை உறுப்பு எது எனக் காண்க?

A) வா

B) த்

**C) அன்**

D) வ

**விளக்கம்: வந்தான் – வா(வ) + த்(ந்) + த் + அன் + ஆன்**

**வா – பகுதி. இது வ எனக் குறுகி இருப்பது விகாரம்**

**த் – சந்தி, இது 'ந்' எனத் திரிந்து இருப்பது விகாரம்**

**த் – இறந்தகால இடைநிலை**

**அன் – சாரியை**

**ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி**

71) சரியான கூற்றைத் தேர்க.

1. பகுபத உறுப்புகளாகப் பிரிக்கமுடியாத சொல் பகாப்பதம் ஆகும். இது எப்போதும் அடிச்சொல் அல்லது வேர்ச்சொல் ஆக அமையும்.

2. இது 6 வகைப்படும்

**A) 1 மட்டும் சரி**

B) 2 மட்டும் சரி

C) 1 மட்டும் தவறு

D) 1, 2 தவறு

**விளக்கம்: பகுபத உறுப்புகளாகப் பிரிக்க முடியாத சொற்கள் பகாப்பதம் ஆகும். (எ.கா) மரம், கழனி, உண், எழுது. இவை அடிச்சொல் அல்லது வேர்ச்சொல்லாக இருக்கும். இது 4 வகைப்படும்.**

72) பொருத்துக.

அ. பெயர்ப்பகாப்பதம் – 1. உறு, தவ, நனி, கழி

ஆ. வினைப்பகாப்பதம் – 2. நட, வா, படி, வாழ்

இ. இடைப்பகாப்பதம் – 3. நிலம், நீர், நெருப்பு, காற்று

ஈ. உரிப்பகாபதம் – 4. மன், கொல், தில், போல்

A) 3, 2, 1, 4

B) 2, 3, 4, 1

C) 2, 3, 1, 4

**D) 3, 2, 4, 1**

**விளக்கம்: உரிப்பகாப்பதம் – உறு, தவ, நனி, கழி**

**வினைப்பகாப்பதம் – நட, வா, படி, வாழ்**

**பெயர்ப்பகாப்பதம் – நிலம், நீர், நெருப்பு, காற்று**

**இடைப்பகாபதம் – மன், கொல், தில், போல்**

73) எழுதினான் என்பது__________

A) பெயர் பகுப்பதம்

**B) வினைப்பகுபதம்**

C) பெயர்ப்பகாபதம்

D) வினைப்பகாப்பாம்

**விளக்கம்: எழுதுதால் என்னும் வினையைக் குறிக்கிறது. மேலும், பிரிக்க முடிந்த சொல்லாக அமைந்தால் எழுதினான் என்பது வினைப்பகுபதம் ஆகும்.**

74) காலத்தைக் காட்டும் பகுபத உறுப்ப எது?

A) பகுதி

B) விகுதி

**C) இடைநிலை**

D) சந்தி

**விளக்கம்: இடைநிலை என்பது பகுதிக்கும், விகுதிக்கும் இடையில் அமைந்து காலம் அல்லது எதிர்மறையைக் காட்டுவதாகும்.**

75) பொருத்துக

அ. பெயர் பகுபதம் – 1. வாழ்ந்தான்

ஆ. வினை பகுபதம் – 2. மன்

இ. இடை பகுபதம் – 3. நனி

ஈ. உரி பகுபதம் – 4. பெரியார்

**A) 4, 1, 2, 3**

B) 4, 2, 1, 3

C) 4, 3, 2, 1

D) 4, 1, 3, 2

**விளக்கம்: பெயர் பகுபதம் – பெரியார்**

**வினை பகுபதம் – வாழ்ந்தான்**

**இடை பகுபதம் – மன்**

**உரி பகுபதம் – நனி**

76) இடம் எத்தனை வகைப்படும்?

A) 2

**B) 3**

C) 4

D) 5

**விளக்கம்: இடம் 3 வகைப்படும். அவை தன்மை, முன்னிலை, படர்க்கை**

77) பொருத்துக

அ. தன்மை – 1. அவை

ஆ. முன்னிலை – 2. நாம்

இ. படர்க்கை – 3. நீங்கள்

A) 3, 2, 1

B) 1, 2, 3

**C) 2, 3, 1**

D) 2, 1, 3

**விளக்கம்: தன்மை – தன்னைக் குறிப்பது – நான், நாம், நாங்கள், என், எம், எங்கள்**

**முன்னிலை – முன்னால் இருப்பவரைக் குறிப்பது – நீ, நீங்கள், நீர், நீவிர், உன், உங்கள்**

**படர்க்கை – தன்னையும், முன்னால் இருப்பவரையும் அல்லாமல் மூன்றாமவரைக் குறிப்பது – அவன், அவள், அவர், அவர்கள், அது, அவை, இவன், இவள், இவை**

78) பொருத்துக

அ. புல்லை மேய்வது – 1. தீ

ஆ. சுடுவது – 2. ஆ

இ. மணம் வீசுவது – 3. ஏ

ஈ. பறப்பது – 4. வீ

A) 2, 1, 3, 4

B) 2, 3, 4, 1

C) 3, 2, 4, 1

**D) 2, 1, 4, 3**

**விளக்கம்: புல்லை மேய்வது – ஆ (பசு)**

**சுடுவது – தீ (நெருப்பு)**

**மணம் வீசுவது – வீ (மலர்)**

**ஈ. பறப்பது – ஏ (அம்பு)**

79) பொருத்துக.

அ. கோடை விடுமுறை – 1. Degree

ஆ. குழந்தை தொழிலாளர் – 2. Child Labour

இ. பட்டம் – 3. Summer Vacation

ஈ. கல்வியறிவு – 4. Literacy

A) 2, 4, 3, 1

B) 2, 3, 4, 1

C) 3, 2, 4, 1

**D) 3, 2, 1, 4**

**விளக்கம்: கோடை விடுமுறை – Summer Vacation**

**குழந்தைத் தொழிலாளர் – Child Labour**

**பட்டம் – Degree**

**கல்வியறிவு – Literacy**

80) பொருத்தமற்றதைத் தேர்க

A) நீதி – Moral

B) சீருடை – Uniform

**C) வழிகாட்டுதல் – Way**

D) ஒழுக்கம் – Discipline

**விளக்கம்: வழி – Way**

**வழிகாட்டுதல் – Guidance**

81) காலத்தின் அருமையைக் கூறும் திருக்குறள் அதிகாரம் எது?

A) கல்வி

**B) காலமறிதல்**

C) வினையறிதல்

D) மடியின்மை

**விளக்கம்: காலமும், நேரமும் போனால் திரும்பி வராது. மேலும் காலத்தின் அருமை என்ன என்பதை உரைக்கும் வகையில் திருவள்ளுவர் காலமறிதல் என்னும் ஓர் அதிகாரத்தைப் படைத்துள்ளார்.**